# மாட்டுப்பெண், ஒட்டியாணம் மற்றும் அழவணம் (மருதாணி) ஒரு விளக்கம்.

1. ஒரு சில வீடுகளில் தங்கள் வீட்டு மருமகளை "மாட்டுப்பெண்" என்று பேச்சு வழக்கில் கூறுகிறார்கள். பேச்சு வழக்கு மற்றும் நுல்களில் எழுத்து வடிவம்: ‘மருமகள்’ என்பதே நடை முறையிலுள்ளது.

   சிலமணி நேர சிந்தனைக்குப்பின், ‘மாற்றுப்பெண்’ என்ற சொல்லே மருவி "மாட்டுப்பெண்னாக " மாறியதாக கருதப்படவேண்டும். எனவே இனி மருமகள் அல்லது "மாற்றுப்பெண்" என்றே அழைப்போமாக.

2. ஒட்டியாணம் என்பது பெண்களின் ஆபரணமாக கருதப்படுகிறது. சரித்திர நாடகங்கள் மற்றும் சினிமாவில் பெண்கள் "ஒட்டியாணம்" அணிந்து வருவதை காணலாம். எனவே "ஒட்டியாணமென்பது" ‘இடையுடன் ஒட்டிய அபரணமே!’

3.**அழவணம்**

பெண்கள் தங்களின் அழகை மேலும் மேம்படுத்த மருதாணியை கைகளில் பூசிக்கொள்கின்றனர். மருத்துவ ரீதியாகவும் உடலுக்கு சில நன்மைகள் புரிகின்றது. நாட்டிய மங்கையர்கள் தங்கள் நாட்டிய நிகழ்ச்சிக்கு முன் மருதாணியை கைகளில் பூசிக்கொள்கின்றனர்.

வடக்கு தமிழகத்தில் குறிப்பாக திருவண்ணாமலை மாவட்டத்தில் மக்கள் மருதாணியை "அழவணம்" என்று கூறுகின்றனர். "அழவணம்" என்றசொல்லுக்கு அழகுசார்ந்தது என்று பொருள். வண்ணப்பூச்சாக பெண்கள் தடவிகொள்கின்றனர். அழகுவர்ணம் – அழகுவண்ணம் என்பதே பொருள். எனவே தமிழ் கூறும் நல்லுலகம் இனி "மருதாணி" என்று கூறுவதற்கு பதில் "அழகுவண்ணம் " என்று கூற வேண்டும்.